விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 278 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 07 செவ்வாய்க்கிழமை (23.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வட - கிழக்கில் இராணுவத்தினரால் மீட்கப்பட்ட

## 6 ஆயிரம் தங்கப் பொருட்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைப்பு

### நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம்

(கொழும்பு)

வட - கிழக்கு மாகாணங்களில் மனிதாபிமான நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் மீட்கப்பட்ட பத்தாயிரம் தங்கப் பொருட்களில் 6 ஆயிரம் பொருட்கள் இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று கொழும்பு பிரதம நீதவான் அசங்க 15ஆம் பக்கம் பார்க்க

தனியார் நிறுவனங்களிடம்

## மின்சாரத் துறை ஒப்படைக்கப்படமாட்டாது

### ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

நாட்டின் வலுசக்தி இறையாண்மையை அரசாங்கம் எப்போதும் பாதுகாத்து வருவதாகவும் எந்தவொரு சூழ்நிலையிலும் மின்சாரத் துறையை தனி 02ஆம் பக்கம் பார்க்க

# எதிர்வரும் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்

### யாழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க



(யாழ்ப்பாணம்)

நாட்டின் அபிவிருத்திக்கு தடை வராமல் எதிர்வரும் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

புதுக்குடியிருப்பில்

## இனிப்புக்கடையில் கொள்ளை முயற்சி

### இளைஞன் கைது

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் அமைந்துள்ள இனிப்புக்கடை ஒன்றில் பணம் கொள்ளையிடும் முயற்சி ஒன்று நேற்று இரவு இடம் 02ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் 6 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரி 02ஆம் பக்கம் பார்க்க

கரைச்சிப் பிரதேச சபையின்

## தவிசாளருக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்



(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் அபிவிருத்தியை, கரைச்சி பிரதேச சபை குறிப்பாக தவிசாளர் தடுப்பதாகத் தெரிவித்து தேசிய மக் 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண கல்வியில் இடம்பெறும் முறைகேடுகளுக்கு நடவடிக்கை எடுக்கக்கோரி

### சிவசேனை அமைப்பினரால் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வியில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலா 15ஆம் பக்கம் பார்க்க

## தவறான வழியில் அநுர அரசு

### முன்னாள் பிரதமர் தினேஷ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது தவறான வழியில் பயணித்துக் கொண்டிருக்கின்றது என முன்னாள் 02ஆம் பக்கம் பார்க்க

## தெற்கு அரசியல்வாதிகளுக்கு போதைப்பொருளுடன் தொடர்பு

### பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தெற்கின் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு இருக்கின்றமை குறித்து தகவல் கிடைத்துள்ளதாகப் பொதுமக்கள் பாது 15ஆம் பக்கம் பார்க்க

## எதிர்காலத்தில் ஜனாதிபதி சிறை செல்ல நேரிடும்

### உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

சொத்து விபரங்களை மறைத்த குற்றச்சாட்டில் எதிர்காலத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியின் 15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் ஒழிப்பு என்ற போர்வையில் எமது குரலை ஒடுக்க வேண்டாம்

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்தில் சகல எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைந்து பங்குபற்றியதைக் கண்டு அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டங்களுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். ஆனால் அந்தப் போர்வையில் எமது குரலை ஒடுக்க முற்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டாது என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்துக்கு சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. விடுக்கப்பட்ட அழைப்பிற்கமையவே நாம் அவற்றில் பங்கேற்றிருந்தோம். ஆனால் அரசாங்கம் அதைக் கண்டு அஞ்சுகிறது. அதனால் தான் கள்வர்கள் அனைவரும் ஒன்றிணைந்து விட்டதாகக் கூறுகின்றனர். அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டங்களுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எம்முள் இருந்தால் அவர்களையும் கைது செய்யுங்கள். அவர்களுக்கெதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் கள்வர்களைக் கைது செய்வதாகக் கூறி எதிர்க்கட்சிகளின் குரலை முடக்குவதற்கு முயற்சித்தால் அதை ஏற்கமுடியாது.

நாம் அதற்கெதிராக தொடர்ச்சியாகக் குரல் கொடுப்போம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம். அவர் நீதிமன்றத்தைப் புறக்கணிக்கக் கூடியவராக இருந்தால் மாத்திரமே அவரைக் கைது செய்யலாம்.

ஆனால் அவர் அவ்வாறு செயற்படவில்லை. சகல விசாரணைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார். அவ்வாறிருக்கையில் எந்தவொரு அடிப்படையும் இன்றியே அவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு ஊழல் ஒழிப்பு என்ற போர்வையில் எதிர்க்கட்சியினரை முடக்க முயற்சித்தால் அதற்கெதிராக நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம். மாறாக ஆட்சியமைப்பதற்காக நாம் ஒன்றிணையவில்லை. எமது கூட்டணி ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கானதாக இருக்கும் என்றார். (ம-7)

### நுவரெலியாவில் மோ.சைக்கிள் விபத்து;

# 21 ஆவது பிறந்தநாளில் உயிரிழந்த இளைஞன்

(நுவரெலியா)

இராகலை - நுவரெலியா பிரதான வீதியில் வேகமாக சென்ற லொறி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த வீதியின் ஹாவா - எலிய காட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் (21) இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டிலிருந்து நுவரெலியா நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த இளைஞன் காட்டுச் சந்தியிலிருந்து நுவரெலியா நகருக்குள் நுழைந்தபோது, இராகலையிலிருந்து நுவரெலியா நோக்கி வேகமாகச் சென்ற லொறி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியான இளைஞன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று (22) காலை உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் நுவரெலியாவின் ஹாவா எலியா பகுதியைச் சேர்ந்த மானெத் ஆபூர்வா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்த இளைஞனின் 21 ஆவது பிறந்தநாள் நேற்று (22) என விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## மின்சாரத்துறை...

யார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (22) நடைபெற்ற மின்சாரத் துறையில் புதிய மறுசீரமைப்புகள் குறித்த முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தேசிய பாதுகாப்பு மற்றும் இறைமைக்காக வலுசக்தி இறையாண்மையை உறுதி செய்வது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும், மின்சாரத் துறையின் நிறுவனக் கட்டமைப்பில் உள்ள குழப்ப நிலையைத் தீர்த்து, முறையான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவதே அரசாங்கத்தின் தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் மின்சாரத் துறையின் செயற்திறனை அதிகரிப்பதன் மூலம் புதிய மாற்றத்திற்கு ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பு அவசியம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக பழைய கட்டமைப்பு இனிமேலும் போதுமானதாக இல்லை என்றும், புதிய கட்டமைப்பின் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது வகிக்கும் பதவிகள் அல்லது வேதன அளவுகள் எந்த வகையிலும் குறைக்கப்படாமலும்,பதவி உயர்வுக்குச் செல்வதற்கு நிலவிய தடைகளை நீக்கும் வகையில் செயற்படல், அனைத்து ஊழியர் உரிமைகளையும் பாதுகாத்தல், புதிய நிறுவனக் கட்டமைப்பில் இலங்கை மின்சார சபையாக இருந்த அனைத்து உரிமைகளையும் உறுதி செய்தல், புதிய நிறுவன கட்டமைப்பில் உள்வாங்கப்படும்போது இலங்கை மின்சார சபையாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்த்தல், வலுசக்தி இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் அதை முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றுவது ஆகிய கோட்பாடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிறுவனங்கள் அதன் ஊழியர்களுக்காக அன்றி, நாட்டிற்காகவும் பொது மக்களுக்காகவும் உள்ளன என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மிகவும் செயற்திறனுடன், தொடர்ச்சியாகவும் நியாயமான விலையிலும் நுகர்வோரின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தால், அது அரசாங்கத்திற்கும் ஊழியர்களுக்கும் கிடைத்த வெற்றியாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் எப்போதும் தயாராக இருப்பதாகவும், இலங்கை மின்சார சபையில் நடப்பது நீண்டகால நிறுவனக் கட்டமைப்பை புதிய நிறுவனக் கட்டமைப்பாக மாற்றுவது மாத்திரமேயாகும்.

இது விற்பனையோ, அரச உரிமையை கைவிடுவதோ அல்லது வலுசக்தி இறையாண்மையை கைவிடுவதோ அல்ல என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

## வவுனியாவில்...

வித்தனர்.

வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசீத் சுரங்க வீரத் அவர்களின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் வவுனியா நகரப் பகுதியில் திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது மோட்டார்சைக்கிளில் கஞ்சா கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன்,

மோட்டார்சைக்கிளும் உடைமையில் இருந்த 6 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 12 இலட்சம் ரூபாய் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வவுனியா மருக்காரம்பளை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,250)

## எதிர்வரும்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தொழில் திணைக்களத்தின் நடமாடும் சேவையில் கலந்து கொண்டபின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மூன்று தேர்தல்களை நடத்தியுள்ளோம். தற்போது நாட்டில் அபிவிருத்திகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குத் தடைவராமல் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி செய்வோம் என்றார்.

மேலும், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தில் நடைபெற்ற நடமாடும்சேவையை நிகழ்வில் கலந்து கொண்டதோடு அலுவலகத்தையும் கண்காணித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண தொழில் ஆணையாளர் எஸ்.சிவ ரஞ்சினி, வடமாகாண அலுவலக உதவி தொழில் ஆணையாளர் கே.நாகேந்திரன், யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் எ.அன்ரன் தனேஸ், யாழ். மாவட்ட தொழில் திணைக்கள அதிகாரிகள், நடமாடும் சேவையை பெற வந்த பயனாளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம-7)

## தவறான...

பிரதமர் தினேஷ் குணவர்தன குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் கவலையில் உள்ளனர். வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கின்றது. அரசின் பயணம் தவறு என்பதையே இது வெளிப்படுத்துகின்றது என்றார்.

மேலும், எனது அரசியல் பயணம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இறுதி மூச்சு இருக்கும்வரை அரசியல்வாதிகளால், அரசியலை விட்டுச் செல்ல முடியாது. அவ்வாறு செல்வோம் எனக் கூறுவது பொய்.

எதிரணிகளின் வேலைத்திட்டம் என்னவென்பது பற்றி அவதானித்துக் கொண்டிருக்கின்றேன் என்றார். (ம-7)

## இனிப்பு...

பெற்றுள்ளது.

குறித்த கடையில் பணம் திருட்டில் ஈடுபட்டதனை உரிமையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தவுடன், அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் இணைந்து குறித்த இளைஞனை மடக்கிப் பிடித்து புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்டவர் பரந்தன் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,299)

RAVEENS EMC KARAVEDDY
Admission for Grade 06 (2026)
(English Medium)
- Admission forms are available.
- Scholars only.
- Closing date 28.09.2025 (Sunday)
- Limited Vacancies (04)

(C-3940)

Director
P.[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு
# குப்பைமேடு போன்றது
## அச்சமடைய போவதுமில்லை என்கின்றார் அமைச்சர் பிமல்

(கொழும்பு)

**குப்பை மேட்டைப் போன் றதாகவே எதிர்க்கட்சிகளின் தற்போதைய ஒன்றிணைவு காணப்படுகிறது. நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திப் பக்கம் உள்ளார்கள் என போக்கு வரத்து அமைச்சர் பிமல் ரத் நாயக்க தெரிவித்தார்.**



அம்பாறை பகுதியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் திருடர்கள், ஊழல்வாதிகள் என்று ஒருவரையொருவர் தூற்றிக் கொண்டவர்கள் இன்று ஒரே மேடையில் ஒன்றிணைந் துள்ளார்கள்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக நாம் ஒருவரை ஒருவர் திருடர் என்று விமர்சித்துக்கொண்டோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். இதனை மக்கள் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

எதிர்வரும் காலப்பகுதியில் நடைபெறும் தேர்தல்களின் போது தற்போது ஒன்றிணைந் துள்ள திருடர்கள் அனைவரையும் ஒருமித்த வகையில் தோற்கடிக்க முடியும். திருடர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்களின் அரசியல் தீர்மானத்தை இலகுபடுத்தியுள்ளார்கள்.

மக்களின் பிரச்சினைகளுக்காகவா எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்துள்ளார்கள். இல்லை, சட்டத்தில் இருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது, எதிர்காலத்தில் தமது அரசியலை எவ்வாறு வலுப்படுத்திக்கொள்வது என்பதற்காகவே தற்போது ஒன்றிணைந் துள்ளார்கள்.

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவுக்கு அச்சமடையப் போவதுமில்லை, காலத்தை வீணடிக்கப் போவதுமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் ஒன்றிணைந் தவர்களிடமும் ஒருமித்த தன்மை இல்லை.

குப்பைமேட்டை போன்றதாகவே எதிர்க்கட்சிகளின் தற்போதைய ஒன்றிணைவு காணப்படுகிறது. எதிர்க் கட்சியினர் எதிர்காலத்திலேனும் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் மக்களாணையை விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திப் பக்கம் உள்ளார்கள் எனத் தெரிவித்தார். (நி)

# யோஷிதவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுமார் 73 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாக ஈட்டியதாக யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ மற்றும் டெய்சிபாட்டி ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

குறித்த வழக்கை ஒக்டோபர் 15 ஆம் திகதி திரும்பப் பெற கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ள யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரெஸ்ட் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

இந்த வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதி அநுரகுமார ஜப்பானுக்கு விஜயம்

(கொழும்பு)

ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர் வரும் 27 முதல் 30 வரை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ளார் என்று வெளி விவகார அமைச்சு தெரிவித் துள்ளது.

இவ்விஜயத்தின் போது, ஜனாதிபதி, ஜப்பானின் மாட்சிமை மிகு பேரரசரை சந்தித்துப் பேசவுள்ளதுடன், பரஸ்பர ஆர்வம்கொண்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஜப்பானிய பிரதமருடன் உச்சி மாநாட்டுச் சந்திப்பொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.



இலங்கையில் அதிகரித்து வரும் பொருளாதார வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத் தும் வகையில், முக்கிய ஜப்பானிய வணிகங்கள் மற்றும் டோக்கியோவில் உள்ள முதலீட்டாளர்களின் உயர் மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வணிக மன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றவுள் ளார். (நி)

# மின் விநியோகம் தொடர்பான பணிகள் அத்தியாவசிய பணிகளாக அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மின்சார விநியோகம் தொடர்பான அனைத்துப் பணிகளும் அத்தியாவசிய பணிகளாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கையில் மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய பணிகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் வகையில் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள் ளது.

மின்சார சபையின் பணியாளர்கள் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரசபையில் அரசாங்கம் மேற்கொள்ள உள்ள மாற்றங்கள் தொடர்பில் தொழிற்சங்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன. இந்த பின்னணியில் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட் டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி குமாநாயக்கவின் கையொப்பத்துடன் நேற்று முன்தினம் திகதியிடப்பட்டு இந்த வர்த்தமானி அறிவித் தல் வெளியிடப்பட்டுள் ளது. (நி)

# இலங்கை வந்துள்ள இந்திய கடற்படைத் தளபதி

(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி, நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று திங்கட்கிழமை இலங்கை வந்தடைந்தார்.

இந்திய கடற்படைத் தளபதி இவ் விஜயத்தின்போது பிரதமர் ஹரிணி அமரசூரிய, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கஞ்சன பனாகொட உட்பட பல முக்கியதரப்பினரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின் போது கடல்சார் பாதுகாப்பு, திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகள் உட்பட பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான பல விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மேலும், அவர் "மாறும் இயக்கவியலின் கீழ் இந் தியப் பெருங்கடலின் கடல்சார் நோக்கு நிலை" என்ற கருப் பொருளில் கொழும்பில் நடைபெறவுள்ள 12 ஆவது காலி உரையாடல் 2025 - சர்வதேச கடல்சார் மாநாட்டிலும் கலந்து கொள் ளவுள்ளார்.



இந்திய கடற்படைத் தளபதியின் இவ்விஜயமானது பரஸ்பர மரியாதை, கடல்சார் நம்பிக்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மைக்கான பகிரப்பட்ட பார்வை ஆகியவற்றின் அடிப் படையில் அமைந்த, இந்தியா - இலங்கை உறவுகளை மீண் டும் உறுதிப்படுத்துவதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 1969.03.23
உதிர்வு 2025.09.21

எமது கல்லூரியின் இந்து நாகரிக பாட ஆசிரியர் திருமதி.ர.லோகநாதன் அவர்களின் அன்புக் கணவர்

அமரர்.
**நாகலிங்கம் லோகநாதன்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரமடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியாவின் அதிரடி ஆட்டத்தால் மீண்டும் வீழ்ந்தது பாகிஸ்தான்

**17 ஆவது ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 4 சுற்றின் 2 ஆவது ஆட்டம் டுபாயில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதியிருந்தன. இப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை வீழ்த்தி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிவாகை சூடியது.**

பாகிஸ்தானுக்கு எதிரான இப் போட்டியில் இந்திய அணி நாணயச் சுழற்சியில் வென்று பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி, பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 21 ஆக இருந்தபோது பகர் சமான் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு இணைந்த பர்ஹான், சயீம் அயூப் ஜோடி அதிரடியாக ஆடியது. குறிப்பாக பர்ஹான் சிக்சர். பவுண்டரிகளை விளாசி அரை சதம் கடந்தார்.

இந்த ஜோடி 72 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சயீம் அயூப் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பொறுப்புடன் ஆடிய பர்ஹான் 58 ஓட்ங்களில் வெளியேறினார். முகமது நவாஸ் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில், பாகிஸ்தான் 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 171 ஓட்ங்கள் எடுத்துள்ளது. இதையடுத்து, 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

இந்தியத் தொடக்க வீரர்கள் அபிஷேக் சர்மா மற்றும் சுப்மன் கில் ஆகியோர் பாகிஸ்தான் பந்துவீச்சை துவம்சம் செய்தனர். அபிஷேக் சர்மா அதிரடியாக அரைசதம் அடித்தார். சுப்மன் கில் 47 ஓட்டங்களிலும், சூர்யகுமார் யாதவ் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து திலக் வர்மா களமிறங்கினார். அபாரமாக ஆடிக்கொண்டிருந்த அபிஷேக் சர்மா 74 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து சஞ்சு சாம்சன் களத்திற்கு வந்தார்.

இறுதியில், இந்திய அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்கள் எடுத்து, 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (3)



## மாபெரும் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி; சம்பியனானது அச்சுவேலி கலைமகள்



யாழ்ப்பாணம் - மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 2025 ஆம் ஆண்டுக்கான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த வாரம் ஆரம்பமான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஏ பிரிவில் 7 கழகங்கள் பங்குபற்றி போட்டியிட்டு இருந்தன.

இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கெரடாவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் பலப்பரிட்சை நடத்தியிருந்தது.

நான்கு சுற்றுக்களும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மூன்று சுற்றுக்களில் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

அத்துடன் பி பிரிவில் நடைபெற்ற போட்டியில் 20இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றி இறுதிப்போட்டிக்கு அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி பலப்பரீட்சை நடத்தியிருந்தது.

மூன்று சுற்றுக்களிலும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகம் மூன்று சுற்றுக்களில் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியில் ஏ பிரிவில் ஆட்ட நாயகனாக இந்து இளைஞர் அணியின் வீரர் சன்சயன் மற்றும் பி பிரிவில் அச்சுவேலி கலைமகள் அணியின் சன்ஜெய் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டிருந்தனர். (3-104)

## சர்வதேச ரி-20 கிரிக்கெட் தொடரில் உலக சாதனை படைத்த அபிஷேக் சர்மா



சர்வதேச கிரிக்கெட் ரி-20 போட்டிகளில் குறைந்த பந்துகளில் 50 சிக்ஸர்கள் விளாசிய வீரர் என்ற சாதனையை அபிஷேக் ஷர்மா படைத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர் அபிஷேக் ஷர்மா 39 பந்துகளில் 74 ஓட்டங்கள் விளாசினார். இதில் 5 சிக்ஸர்கள் அடங்கும்.

இதன்மூலம் அவர், சிக்ஸர்கள் விளாசியதில் அதிவேக சாதனை படைத்த முதல் வீரர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.

அதாவது, முழு உறுப்பினர் அணிகளில் குறைந்த பந்துகளில் 50 சிக்ஸர்களை அடித்த வேகமான வீரர் இவர்தான்.

இதற்கு முன் மேற்கிந்தியத் தீவுகளின் எவின் லூயிஸ் 366 பந்துகளில் 50 சிக்ஸர்கள் அடித்திருந்தார். தற்போது அபிஷேக் ஷர்மா 50 சிக்ஸர்களை 331 பந்துகளில் அடித்து மிரட்டியுள்ளார். மூன்றாவது இடத்தில் ஆந்த்ரே ரஸல் (409 பந்துகள்) உள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஹஸ்ரதுல்லா ஸஸாய் 492 பந்துகளிலும், சூர்யகுமார் யாதவ் 510 பந்துகளிலும் 50 சிக்ஸர்கள் அடித்திருந்தனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடித்தலை கட்டுப்படுத்த ரோந்து நடவடிக்கையை அதிகரிக்குமாறு வலியுறுத்து



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற் பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையை தடுப்பதற்காக ரோந்து நடவடிக்கைளை அதிகரிக்குமாறு கடற்படையினரிடம் அமைச்சர் இ.சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளருக்கும், கடற்படையினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் பணிப்பின் பேரில் கடற்தொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி. கோலித கமல் ஜினதாச மற்றும் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் சுதாகரன் ஆகியோர், மீனவ பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதன்போது மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன், அவர்களின் கோரிக்கைகளும் உள்வாங்கப்பட்டன.

இதனையடுத்து முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை தளத்திற்கு விஜயம் செய்து, சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த கடற்படை ரோந்து நடவடிக்கையை அதிகரிக்குமாறும் வலியுறுத்தினர்.

பின்னர் புல்மோட்டை கடற்படைத் தளத்திற்கு சென்று அங்குள்ள கடற்படை அதிகாரி மற்றும் கரையோரப் பாதுகாப்பு அதிகாரியுடன் கலந்துரையாடி உடன் அமுலுக்கு வரும் வகையில் முகத்துவார வாயில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இச்சந்திப்புகளில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரும் பங்கேற்றிருந்தார். (நி)

## போலி மருத்துவர் கைது

(கொழும்பு)

சுமார் 20 வருடங்களாக மருத்துவராக வேடமிட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வந்த ஒருவர் எகொட உயன காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்துவ, வாதுவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேகநபரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மருத்துவர் அல்ல என்றும் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு மருத்துவரின் பதிவு எண்ணைப் பயன்படுத்தி வந்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி)

## ஐஸ், போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

(அராலி)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊரெழுப் பகுதியில் நீண்ட நாட்களாக ஐஸ் பாவனையில் ஈடுபட்டு வந்த 27 வயது இளைஞன் பாவனைக்காக வைத்திருந்த பொருட்களுடன் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 3600 மில்லிகிராம் ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள், அதனைப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சான்றுப் பொருட்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-104)

## புலமைப்பரிசில் நலன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயலூக்கமுள்ள உறுப்பினர்களின் (ETF அங்கத்தவர்கள்) பிள்ளைகளுக்கு தரம் 5 புலமைப் பரிசில் நலன் திட்டம் வழங்கப்படவுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த 9000 பிள்ளைகளுக்கு தலா 15000 ரூபாய் அடிப்படையில் இந் நிதி உதவித் தொகை வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் www.etfb.lk எனும் இணையத்தள முகவரியினூடாக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என அதன் தலைவர் அறிவித்துள்ளார். (3)

## கடுமையாகும் விதிகள் பொலிஸாரின் அறிவிப்பு


(கொழும்பு)

சிற்றூந்தின் முன்பக்க கண்ணாடிகளில் காட்சிப் படுத்தப்படும் பெயர்ப் பலகைகள் மற்றும் பதவிகள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கை பொலிஸார் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டத்தின் பிரகாரம் சிற்றூந்தின் முன்பக்க கண்ணாடியில் பெயர்ப்பலகைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துவது சட்ட விரோதமானது என பொலிஸார் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸார் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

சிற்றூந்தின் முன்பக்க கண்ணாடியை ஐந்தில் ஒரு பங்கு அளவுக்கு மட்டுமே கருமையாக்க அனுமதி உள்ளதாகவும், அதுவும் கண்ணாடியின் மேல் பகுதியில் மட்டும் கறுப்பு நிறமாக்க அனுமதிக்கப்படுவதாகவும் பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

மேலும், வாகன வரி வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் இலக்கத் தகடுடன் வழங்கப்பட்ட ஸ்டிக்கர் ஆகியவற்றை மாத்திரமே கண்ணாடியில் காட்சிப்படுத்த முடியும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார். (நி)





கிளிநொச்சி பிராந்திய ஈழத்தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் கலை விழா நிகழ்வு கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

(படம்- யதுபாஸ்கரன்)

## விஷேட நுளம்பு கட்டுப்பாட்டு வார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

விஷேட நுளம்பு கட்டுப்பாட்டு வார நிகழ்வு 2025 இன்று மற்றும் நாளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு பரவலிலிருந்தும் நோய்த் தாக்கத்திலிருந்தும் விடுபட முடியும்.

இன்று குருநகர் மற்றும் நாளை கொழும்புத்துறையில் நடைபெற விருக்கும் இந்த விஷேட நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலை துப்பரவாக பேணுமாறும் இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பாட சாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (8)


சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




யா/மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக
02.06.2014 - 22.09.2025 வரை கடமையாற்றி
பணியிலிருந்து ஓய்வு பெற்ற
திருமதி. மோகனவதனி இரவீந்திரன்
(BA,PGDE,SLTS - I) (உப அதிபர்)
அவரது பணிநயந்து பாராட்டி வாழ்த்துவதோடு அவரின்
ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்

சேவைக்கால விபரம்
• யா/செங்குந்த இந்துக் கல்லூரி (18.02.1993 - 31.12.1995)
• மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் (01.01.1995 - 08.04.1997)
• யா/செங்குந்த இந்துக் கல்லூரி (09.04.1997 - 09.09.2004)
• யா/இராமநாதன் கல்லூரி (10.09.2004 - 16.01.2014)
• யா/இணுவில் மத்திய கல்லூரி (17.01.2014 - 01.06.2014)
• யா/மகாஜனக் கல்லூரி (02.06.2014 - 22.09.2025)

வாழ்த்துவோர்...
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
(C-3907)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the undermentioned posts.

## FACULTY OF ENGINEERING

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Civil Engineering/ Computer Engineering/ Electrical and Electronic Engineering/ Mechanical Engineering/ Engineering Mathematics/ Complementary Studies**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Civil Engineering | Priority will be given to Structural engineering, construction management, transportation engineering and Environmental Engineering. |
| Computer Engineering | Special consideration will be given to those who are holding first degree in Computer Engineering. |
| Electrical and Electronic Engineering | Priority will be given to those who have specialized in Electric power. |
| Mechanical Engineering | Priority will be given to those who have graduated in Mechanical Engineering with sound knowledge and skills in Machine design, Thermodynamics, Compressive Fluid mechanics, Automobile engineering, Control system Engineering and Mechatronics. However, those who have specialized in Manufacturing and process engineering, Energy system Engineering and Material science & Engineering will be considered if there will not be enough applicants from the priority list of specialization. |
| Engineering Mathematics | Applicants must possess a strong background in Mathematics and Statistics, and a passion for teaching Engineering Mathematics. Candidates with demonstrated experience in teaching university-level mathematics, particularly with a focus on engineering applications, will be given special consideration. |
| Complementary Studies | Special consideration will be given to candidates with expertise in Management or Humanities & Social Sciences and a passion for teaching engineering students. Priority will be given to those with university-level teaching experience, particularly with a strong focus on engineering/industrial applications- especially proficiency in Business Law, Marketing, Management (Financial, Resource, Entrepreneurial), Economic Development, and Advanced Written English. |

## FACULTY OF ARTS

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Linguistics/ English Literature/ Law**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| English Literature | Preference will be given to those who have specialized in the field of English/English Literature. |

## FACULTY OF AGRICULTURE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Agronomy/ Animal Science/Agricultural Engineering**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Agronomy | Floriculture/ Landscaping/ Crop Physiology/ Crop Resilience/ Protected Agriculture |
| Animal Science | Animal Nutrition/Livestock Management |
| Agricultural Engineering | Agricultural Machinery/Advanced Agricultural Surveying |

## FACULTY OF SCIENCE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Chemistry/ Physics/ Botany**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Chemistry | Organic Chemistry/Physical Chemistry |
| Physics | Theoretical Physics, Atomic /Nuclear Physics, Particle Physics, Quantum Physics, Astrophysics and Geophysics |
| Botany | Plant Systematics/ Plant Breeding |

## FACULTY OF HINDU STUDIES

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Sanskrit**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Sanskrit | Sanskrit Literature and Sanskrit Grammar candidates shall be preferable with an additional interest or knowledge in Computational Sanskrit, Modern Sanskrit Literature and Sanskrit Drama |

## FACULTY OF ALLIED HEALTH SCIENCES

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Nursing/ Pharmacy/ Medical Laboratory Sciences/ Human Biological Sciences/ Sports Science Unit**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Nursing | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic qualification in BSc Honours in Nursing and preferable work experience in Hospital/ Clinical work experience in the field of Emergency Nursing/ Critical care Nursing/ Psychiatric Nursing/ Clinical Pharmacology.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) plus **Doctoral Degree** in the field of Clinical Pharmacology/ Emergency Nursing/ Critical care Nursing/ Psychiatric Nursing OR **a Master's Degree** in the field of Clinical Pharmacology/ Emergency Nursing/ Critical care Nursing/ Psychiatric Nursing with full time research of at least 24 months duration. |
| Pharmacy | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic qualification in BSc Honours in Pharmacy or BPharm Hons.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) plus **Doctoral Degree** in Pharmacology and Pharmacotherapy/ OR **Master's Degree** in Pharmacology and Pharmacotherapy with full time research of at least 24 months duration. |
| Medical Laboratory Sciences | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic qualification in BSc in MLS and preference will be given to those who either have or are doing **the postgraduate degree as in the field** of Haematology/Histopathology.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) in Medical Laboratory Sciences plus **Doctoral Degree** in the field of Haematology/ Histopathology OR a **Master's Degree** in the field of Haematology/ Histopathology with full time research of at least 24 months duration. |
| Human Biological Sciences/ Anatomy | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic degree with specialization in Nursing/ Human Biological Sciences with the specialization in Anatomy.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) plus **Doctoral Degree** in the Anatomy OR a **Master's Degree** in the Anatomy with full time research of at least 24 months duration. |
| Human Biological Sciences/ Physiology | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic degree with specialization in Pharmacy/ Nursing.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) plus **Doctoral Degree** in Physiology OR a **Master Degree's** in Physiology with full time research of at least 24 months duration. |
| Human Biological Sciences/ Biochemistry | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic degree with specialization in MLS/ Pharmacy/ Human Biological Sciences with the specialization in Biochemistry.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) plus **Doctoral Degree** in Biochemistry/ OR **a Master's Degree** in Biochemistry with full time research of at least 24 months duration. |
| Sports Science Unit | **Lecturer (Probationary):** Application for the post will be entertained from those who have possessed the basic qualification in BSc Hons in Physical Education OR BSc Hons in Sports Sciences and Management. Preference will be given to those with coaching licenses in Hockey, Combat games, Tennis and Swimming.<br><br>**Senior Lecturer:** Application for the post will be entertained from those who have possessed academic qualifications required for Lecturer (Probationary) plus **Master's Degree** (02 years with a research component) in Sports Psychology and Sociology. Preference will be given to those with coaching licenses in Hockey, Combat games, Tennis and Swimming. |

## FACULTY OF TECHNOLOGY

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in **Biosystems Technology/ Engineering Technology/ Interdisciplinary Studies.**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Biosystems Technology | Preference will be given to those who have degrees in<br>▪ **Biosystems Technology** specialized in **Commercial Green Farming Technology/ Food Production Technology**<br>▪ **Food Science and Technology**<br>▪ **Agriculture Science** specialized in **Animal Science/ Biology** |
| Engineering Technology | Preference will be given to those who have degrees in **Engineering / Engineering Technology** or any other related degrees specialized in one of the following fields:<br>▪ **Automobile Technology / Mechanical Engineering**<br>▪ **Electro Technology / Electrical and Electronic Engineering** |
| Interdisciplinary Studies | Preference will be given to those who have degrees in **Bachelor of Science** specialized in **Mathematics or / and Statistics.** |

(7 ஆம் பக்கம் பாக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனின் சொத்து மக்கள் சொத்து

# மந்திரிமனை முன் கவனயீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் எனக் கோரி மந்திரிமனை முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனான சங்கிலிய மன்னன் காலத்து மந்திரி மனை எனவும் தொல்லியல் சின்னமாகவும் அறிவிக்கப்பட்ட மந்திரிமனை கடந்த 17ஆம் திகதி யாழில் பெய்த மழை காரணமாக அதன் ஒரு பாகம் இடிந்து விழுந்திருந்தது.

இந்நிலையில் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரர், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் மந்திரிமனையைப் பார்வையிட்டு அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் என உறுதி அளித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் "இலங்கை அரசே தமிழர்களின் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடு", "தொல்லியல் திணைக்களமே","பௌத்த சின்னங்களைப் பாதுகாப்பது போல் தமிழரின் மரபுரிமைச் சின்னங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடு ", " மன்னன் சொத்து மக்கள் சொத்து" போன்ற கோஷங்களை எழுப்பி மந்திரிமனை முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (8-104-33)

# தியாக தீபம் திலீபனின் 8 ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 8 ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

# நாகர்கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் படுகொலையின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இலங்கை விமான படையின் விமானங்கள் மூலம் நடத்திய குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவ மாணவிகளின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

கடந்த 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி, நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சு தாக்குதலில் பாடசாலையில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 21 மாணவ மாணவிகள் படுகொலையானார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயங்களுக்கு உள்ளானார்கள்.

அன்றைய தினம் படுகொலையான மாணவர்களின் நினைவாக பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி முன்பாக சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்துத்தப்பட்டது.

நிகழ்வில் படுகொலையான மாணவர்களின் பெற்றோர்கள், நண்பர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (8-33)

# பண்பாட்டுப் பெருவிழாவும் நூல் வெளியீடும்

(வவுனியா)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா வெகு விமர்சையாக நடைபெறவுள்ள நிலையில் அந்த வாய்ப்பை கலைஞர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இராசரட்ணம் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினுடைய பிரதேச பண்பாடு பெருவிழாவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் பிரதேசத்தின் கலை பண்பாட்டம்சங்களை பெருமைப்படுத்தும் விதமாக "புதுவையாள்" மலர் வெளியீட்டு நிகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தது. இருப்பினும் நீண்டகாலமாக இவ் மலர் வெளியீட்டுவிழா நடைபெறவில்லை. எனவே இம்முறை பண்பாட்டு பெருவிழாவுடன் மலர் வெளியீட்டை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளோம் .

அத்துடன் விசேடமாக கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக கலைஞர் விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளது. அந்தவகையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அனைத்து கலைஞர்களும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்ப படிவங்களை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்டு தமது விண்ணப்பங்களை கையளிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (3-299)

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)



**FACULTY OF SIDDHA MEDICINE**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Noi Naadal Chikitchai/ Kuzhanthai & Mahalir Maruthuvam**

**Note:**

| | |
|---|---|
| Noi Naadal Chikitchai | A BSMS degree from a recognized University in Sri Lanka and a Registered Ayurvedic Practitioner of the Ayurvedic Medical Council, Sri Lanka, and priority will be given to those specialized in Puramaruthuvam. |
| Kuzhanthai & Mahalir Maruthuvam | A BSMS degree from a recognized University in Sri Lanka and a Registered Ayurvedic Practitioner of the Ayurvedic Medical Council, Sri Lanka, and priority will be given to those specialized in Mahalir Maruthuvam. |

**SIR PONNAMPALAM RAMANATHAN FACULTY OF VISUAL AND PERFORMING ARTS (SPRFVPA)**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Instrumental Music.**

**Note:**

| Discipline | Field of Specialization |
|---|---|
| Instrumental Music | Special consideration will be given to those who are holding special degree in Veena. |

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details.

**Closing date:**

Applications should reach us on or before the date: 23.10.2025

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna Collection Account No: **970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

Perfected applications for the **posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
23.09.2025**

(C-3935)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விமானத் தளத்தைக் கேட்டு மிரட்டிய ட்ரம்ப்

### ஒரு அங்குலம்கூட தர முடியாது எனப் பதிலளித்த தலிபான்கள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானிலுள்ள பக்ராம் விமானத் தளத்தை மீண்டும் அமெரிக்காவிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒரு அங்குலம்கூட தர முடியாது என தலிபான் அரசு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி நடந்து வருகிறது. கடந்த 2021ஆம் ஆண்டு அமெரிக்க ஆதரவு பெற்ற அரசு கவிழ்ந்ததையடுத்து ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றினர்.

இதையடுத்து அமெரிக்காவிற்கும் தலிபானுக்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தம் மூலம் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறின. ஆப்கானிஸ்தானில் உள்ள பக்ராம் விமானத் தளத்தில் மீண்டும் அமெரிக்கப் படைகளை குவிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

அந்த விமானப்படைத்தளம் சீனாவுக்கு அருகில் இருப்பதால் அங்கு படைகளை குவிக்க விரும்புகிறார்.

இதற்கிடையே தலிபான்களுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர், "பக்ராம் விமானத் தளத்தின் கட்டுப்பாட்டை அமெரிக்காவிடம் ஆப்கானிஸ்தான் "விரைவில்" திருப்பித் தரவேண்டும்.

அந்த விமானத் தளத்தை அமெரிக்காவிற்கு ஆப்கானிஸ்தான் திருப்பித் தரவில்லை என்றால், மோசமான விடயங்கள் நடக்கும்" எனத் தெரிவித்தார். இந்நிலையில் ட்ரம்ப் மிரட்டலைத் தலிபான் அரசு நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் தலைமை அதிகாரி பஸிஹுதீன் ஃபித்ரத், "சிலர் அரசியல் ஒப்பந்தங்கள் மூலம் தளத்தை மீண்டும் பெற பேச்சுவார்த்தை நடந்த விரும்புகின்றனர். ஆனால் எந்த ஒரு ஒப்பந்தத்தின் மூலமும் ஆப்கானிஸ்தானின் நிலத்தில் ஒரு அங்குலம்கூட தர முடியாது." என்று தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக அதிகாரபூர்வ அறிக்கை வெளியிட்ட ஆப்கானிஸ்தான் அரசு, "நாட்டின் சுதந்திரம் மற்றும் நிலையான ஒருமைப்பாடு மிக முக்கியமானவை" என தெரிவித்துள்ளது. (நி)


## "பாலஸ்தீனம்

## உலக நாடுகளு

(ஜெருசலேம்)

"பாலஸ்தீனம்" எ
இருக்காது. எங்கள் நாட்
பகுதியில் ஒரு பயங்கரவ
எங்கள் மீது திணிக்கும்
களின் சமீபத்திய முய
பதில், நான் அமெரிக்கா
திரும்பிய பிறகு அளிக்க
இஸ்ரேல் பிரதமர் ெ
தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க விசாவிற்கு போட்டியாக புதிய விசாவை அறிமுகப்படுத்தும் சீனா



(பீஜிங்)

சீனா புதிய கே விசாவை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எச் 1 பி விசா பெறுவதற்கு அமெரிக்கா கடும் நிபந்தனைகளை விதித்துள்ள நிலையில், பிற நாடுகளில் இருந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களை ஈர்ப்பதற்காக சீனா கே விசாவை அறிமுகப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் இந்த விசா நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலுமிருந்து அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய துறைகளில் திறமையான நிபுணர்களை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த விசா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சீனா தரப்பில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "ஓகஸ்டில் அங்கீகரிக்கப்பட்ட இந்த முடிவு, வெளிநாட்டினரின் நுழைவு மற்றும் வெளியேறும் விதிமுறைகளை திருத்துகின்றது.

மேலும் இது ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்" என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)




## பாலஸ்தீன அரச
## நான்கு முக்கிய மேற்



(லண்டன்)

காசா போரினால் ஏற்பட்ட விரக்தி மற்றும் இருநாடுகளிடையேயான தீர்வை ஊக்குவிக்கும் நோக்கில், இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாலஸ்தீன அரசை அங்கீகரித்தன.

இது இஸ்ரேலிடமிருந்து கடுமையான எதிர்வினையைத் தூண்டியது.

பாரம்பரியமாக இஸ்ரேலுடன் கூட்டணி வைத்துள்ள மேற்கத்தேய நாடுகளில் நான்கு நாடுகள் எடுத்த முடிவு, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து ஒரு சுதந்திர தாயகத்தை உருவாக்குவதற்கான

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ம்" என்ற நாடு இருக்காது
## னுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை!

என்ற நாடு
ட்டின் மையப்
வாத அரசை
ம் உலக நாடு
யற்சிக்கான
காவிலிருந்து
கப்படும் என
நெதன்யாகு



ஒக்டோபர் 7 அன்று நடந்த கொடூரமான படு கொலைக்குப் பிறகு பாலஸ் தீன அரசை அங்கீகரித்து வரும் தலைவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன்.

நீங்கள் பயங்கர வாதத்திற்கு மகத்தான பரிசை வழங்குகிறீர் கள்.

ஆனால் அது நடக்கப் போவதில்லை.


ஜோர்டான் நதிக்கு மேற்கே பாலஸ்தீன அரசு இருக்காது.

பல ஆண்டுகளாக, உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து வரும் மிகப்பெரிய அழுத் தங்களுக்கு எதிராக, அந்தப் பயங்கரவாத அரசு உருவாவதை நான் தடுத் திருக்கிறேன்.

இதை நாங்கள் உறுதி யுடனும், சாதுர்யமான அரசியல் திறமையுடனும் செய்துள்ளோம்.

மேலும், யூதேயா மற்றும் சமாரியாவில் யூதக் குடி யேற்றத்தை இரட்டிப்பாக்கி யுள்ளோம்,

மேலும் இந்தப் பாதையில் நாங்கள் தொடர்ந்து செல்வோம் என்று தெரிவித்துள் ளார். (நி)



## சை அங்கீகரித்த மற்கத்தேய நாடுகள்



பாலஸ்தீனியர்களின் விருப் பத்தை ஆதரிக்கும் 140இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் அவர்களை இணைத்துக் கொண்டது.

பாலஸ்தீனியர்களுக்கும் இஸ் ரேலியர்களுக்கும் அமைதிக் கான நம்பிக்கையையும், இரு நாடு தீர்வுக்கான நம் பிக்கையையும் புதுப்பிக்க, ஐக்கிய இராச்சியம் பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரிக கிறது என்று பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்தார்.

காசாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி புதிய ஆழங்களை எட்டுகிறது.

இஸ்ரேலிய அரசாங்கத்தின் காசா மீதான இடைவிடாத, அதிகரித்து வரும் குண் டுவீச்சு தாக்குதலால் உண்டான பட்டினி, பேர ழிவு முற்றிலும் சகிக்கமுடி யாதவை.

இந்த வாரம் நியூ யோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையில் பிரான்ஸ் உட்பட பிறநாடுகளும் இதைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என் றும் இங்கிலாந்து பிரதமர் தெரிவித்தார். மேலும், ஐக்கிய இராஜ்ஜியத்தின் முடிவை உறுதிப்படுத்த ஸ்டார்மர் அப்பாஸுக்கு கடிதம் எழுதினார்.

அதில் 1917ஆம் ஆண் டில் லண்டன் ஒரு யூத தாயகத்தை ஆதித்ததா கவும், அதே நேரத்தில் யூதரல்லாத சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப் பதாகவும் உறுதியளித்த தாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, இஸ் ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த நட வடிக்கையை கண்டித் தார். (நி)

# நோபல் பரிசு எனக்கு வேண்டும்
## அடம்பிடிக்கும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

இந்தியா, பாகிஸ்தான் மோதலை நிறுத்திய எனக்குக் கட்டாயம் நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் தமது ஆசையை வெளிப்படுத்தி உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பாகப் பதவியேற்றலும் அவரின் அதிரடி நடவடிக் கைகள் குறையவில்லை என்று மக்களிடையே பெயர் பெற்றிருக்கிறார் ட்ரம்ப். மே 10ஆம் திகதி முதல் பேச ஆரம்பித்த நோபல் பரிசு விவகாரத்தை மீண்டும் பேச ஆரம்பித்து ள்ளார்.

உலக நாடுகள் இடையே 7 போர்களை நிறுத் தியவன், இந்தியா - பாகிஸ்தான் மோதலும் என்னால்தான் தீர்த்து வைக்கப்பட்டது என்று விடாமல் அறிவித்து வருகிறார் ட்ரம்ப். அவரின் கூற்றை இந்தியா முற்றிலும் நிராகரித்துள்ளது. 3ஆம் நாட்டின் தலையீட்டை அனுமதித்தது இல்லை என்றும் விளக்கம் அளித்து விட்டது.

ஆனாலும், இந்தியா, பாகிஸ்தான் மோதலை முன்வைத்து அதை நான் தான் தீர்த்து வைத்தேன், எனவே எனக்கு நோபல் பரிசை தரவேண்டும் என்று அமெரிக்காவில் கல்வி நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய போது தமது ஆசையை போட்டு உடைத்துள் ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

2025ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 17 நாட்களில் 90,393 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 25,668 ஆகும்.

அதன்படி, 2025ஆம் ஆண்டின் ஜனவரிமாதம் முதலாம் திகதியில் இருந்து செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 16 இலட்சத்து 56 ஆயிரத்து 916 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# விசேட சுற்றிவளைப்பு 5,688 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5,688 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 658 பேரும், சந்தேகத்தின் பேரில் 23 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 305 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 188 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 44 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 19 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4451 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா-56
உயரம்-6"
தகைமை/தொழில்: PHD,Research Assistant(USA)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/16080

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: மகம்
கி-பா-52
7இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-O/L.கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16082

பிறப்பு:2000-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc.மருத்துவ ஆய்வாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16085

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி-பா-32
உயரம்:57"
தகைமை/தொழில்-A/L, Printing
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16086

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்:57"
தகைமை/தொழில்: A/L, Ticket Controller (ஜேர்மனி)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16087

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா- 38
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15955

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்- மிருகசீரிடம்
கி-பா-36
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Dip in Nursing, BSc
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15957

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-ரோகினி
1இல்செவ்
கி-பா-44 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15958

பிறப்பு-1994-RC
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BFA, Accountant (pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு, தகுதியான ஆண்
தொ.இ: G/15961

பிறப்பு-1998- இந்து
நட்சத்திரம்- சதயம்
9இல் சூரி செவ்
கி-பா-29 1/2
உயரம்-5'3"
தகைமை/தொழில்: Dip in English, HNDE
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவபோசனம்
தொ.இ: G/15963

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 449

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# ஆழ்மனப் பூசல்!

ஒரு ஏழை விவசாயி. எங்கேயோ வெளியிலே புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த சமயம் பார்த்து சின்ன வயது சிநேகிதன் ஒருவன் அவனைப் பார்ப்பதற்கு வந்து சேர்ந்தான்.

"கொஞ்ச நேரம் வீட்டிலே உட்காரு... சில நண்பர்களைப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்.. அப்புறம் நாம் சாவகாசமாக பேசிக்கொண்டிருப்போம்" என்றான். அவன். "நானும் கூட... உன்னோட வருகிறேனே.. ஆனால் அதற்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும் என்றான். என்ன?" என்றான்.

"என்னுடைய ஆடை நல்லா இல்லை. அழுக்காக இருக்கு.

உன்னிடம் விலை உயர்ந்த ஆடைகள் ஏதாவது இருந்தால் கொடு. அதைப்போட்டுக்கொண்டு வருகிறேன். திரும்பி வந்ததும் கழட்டி கொடுத்து விடுகிறேன்!" என்றான். அவன் பார்த்தான். கொஞ்ச காலத்துக்கு முன்னாடி ராஜா அவனுக்குப் பரிசாக கொடுத்திருந்த விலை உயர்ந்த ஆடைகள் பெட்டியிலே இருந்தது. அதை எடுத்துக் கொடுத்தான். "போட்டு கொள்!" என்று.

இவன் வாங்கிப்போட்டுக் கொண்டான் பார்ப்பதற்கு ராஜா மாதிரி இருந்தான் நண்பன். ஆடை கடன் கொடுத்த இவன் நண்பனே இவன் தோற்றத்தைப் பார்த்துப் பொறாமைப்பட ஆரம்பித்துவிட்டான். "என்ன இது. இவன் நம்மிடம் ஆடை ஓசியாக வாங்கிப் போட்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் ராஜா மாதிரி இருக்கு.

என்னைப் பார்த்தால் அவனுக்கு வேலைக்காரன் மாதிரி இருக்கு இந்த ஆடையை அவனிடம் கொடுத்தது தப்பாப் போச்சே என்று நினைத்தான்.

அவனுக்குள்ளேயே இன்னொரு மனது. இந்த கோற்றிலேயும் தலைப் பாகையிலேயும் என்ன இருக்கு என்று யோசித்தான். "இவன் நமக்கு நல்ல நண்பன். அவனுக்கு நாம் இதைக்கூட செய்யக்கூடாதா?" என்றும் நினைத்தான். மனதுக்குள்ளே ஒரு விவாதம் நடக்குது. இருந்தாலும் அந்த ஆடைதான் அவன் மனதிலே அதிக இடத்தை பிடித்தது. அவர்கள் பார்க்க வேண்டிய நண்பன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள், அவனிடம் இவன் சொல்கிறான்.

"இவன் என்னுடைய பால்ய நண்பன். அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அவன் போட்டிருக்கிறானே ஆடை! அது என்னோடது! "என்றான். நண்பனுக்கு அதிர்ச்சி. இவனும் அதுக்குப் பிறகு தான் யோசித்தான்.. "ஆடை விடயத்தை சொல்லியிருக்க வேண்டியதில்லை!" என்று! நண்பனிடம் மன்னிப்பு கேட்டான். இனிமேல் எச்சரிக்கையாக இருப்பேன் என்றான். ஆடை என்னுடையது என்று சொல்லக்கூடாது என்று முடிவு எடுத்துக்கொண்டான்." இரண்டு பேரும் இன்னொருவர் வீட்டுக்குப் போனார்கள் அங்கே அறிமுகத்தை ஆரம்பித்தான். " இதுமாதிரி. இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன்.

அப்புறம்.. ஒரு முக்கியமான விடயம். போட்டிருக்கானே ஆடை.. அது என்னோடது இல்லை!" என்றான். அது அவனுதுதான் இது முதலிலே சொன்னதைவிட மோசம். இரண்டு பேரும் வெளியிலே வந்தார்கள்.

"என்னை மன்னித்துக் கொள்... எச்சரிக்கையாகத்தான் இருந்தேன். வாய் தவறி உளறிவிட்டேன் இனிமேல் உன்னை அறிமுகப்படுத்தும் போது. இந்த ஆடை சமாச்சாரத்தை சொல்லவே வேண்டாம். என்று முடிவு செய்து விட்டேன்!" என்றான்.

அந்த இரண்டு பேருமாக சேர்ந்து மூன்றாவதாக ஒருவர் வீட்டுக்குப் போய் சேர்ந்தார்கள். அங்கே இவன் ரொம்ப கவனமாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தான்.

"இவன் என்னுடைய பால்ய நண்பன்.. அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அப்புறம். அந்த ஆடை விடயம்தானே. மன்னிக்கணும் அதைப்பற்றி நான் எதுவும் சொல்லமாட்டேன்! ஏன்னென்றால் "சொல்லமாட்டேன்" என்று நான் சபதம் எடுத்திருக்கிறேன்!" என்றான். இது எல்லாத்தைவிட மோசம்!

இந்தக் கதையை கொஞ்சம் ஆழமா சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது பலவீனங்கள் எதுவோ அதுவே நாமாக இருக்கிறோம். ஆனால் நம் பலவீனங்களை அடக்குவதற்கு தீர்மானிக்கின்றோம். அதனால் இயற்கையாகவே அது நமது ஆழ்மனதிலே பூசல்களுக்கு மூலகாரணம் ஆகிவிடுகிறது. நான் துறவியாக இருக்கப்போகிறேன் என்று ஒருவன் குரலை உசத்தி சொல்கின்றான் என்றால் அதற்கு நேர் எதிரான எண்ணம் அவனுக்குள்ளே இருந்து தாங்க முடியாமல் வெளியிலே வருது என்று அர்த்தம் என்கிறார் ஒரு பெரியவர் (ஓஷோ).

இந்தக்கால துறவி ஒருவர்.. தன்னுடைய சிஷ்யனுக்கு வாயை ஒரு துணியாலே இறுக்கிக் கட்டி வைத்திருந்தார். "எதற்கு இப்படி.. உங்கள் சீடருக்கு மௌனத்தின் மகிமையை உணர்த்துவதற்காகவா இப்படி வைத்திருக்கீறீர்கள்?" எனறு கேட்டேன்.

"அட நீங்கள் வேறே.. அவன் இன்றையிலேயிருந்து என்னைப் பற்றிய உண்மைகளைப் பேசப் போறதா சபதம் எடுத்திருக்கிறான். அதற்காகத்தான் அவன் வாயிலே துணியைத் திணித்து கட்டிப் போட்டிருக்கிறேன்!" என்றார் அந்தக் குரு!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காற்றாலை, கனியமணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் தீப்பந்தப் போராட்டம்!




(மன்னார்)

மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுத்து வரும் போராட்டம் 50 ஆவது நாளை எட்டிய நிலையில் தீப்பந்தப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், இளைஞர் மற்றும் மன்னார் மக்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 50 ஆவது நாளை எட்டிய நிலையில் நேற்று முன்தினம் இரவு தீப்பந்தம் ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது கையில் தீப்பந்தத்தை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த தீப்பந்த போராட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை மாக்கஸ் அடிகளார், இளையோர், பொது மக்கள் என நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)



2025 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் சிறுகதைப் போட்டிப்பிரிவில் கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலய மாணவி இன்பராசா திகழினி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

(படம்-யதுபாஸ்கரன்)

# வீட்டுக்கு தீ வைத்த விசமிகள்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவரின் வீட்டுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மதிலால் ஏறி மின் சாரத்தினைத் துண்டித்து வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசி தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந் நிலையில் வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்த வீட்டின் உரிமையாளர் தீ பற்றியதனைக் கண்டு வீட்டுக்கு வெளியே வந்து உறவினர்களின் உதவியுடன் தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

இனந்தெரியாத விசமிகள் வைத்த தீயில் வீட்டின் முன்பகுதி எரிந்ததுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 150 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 150 | 200 | 300 |
| தக்காளி | 250 | 160 | 250 | 220 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 300 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 250 | 180 | 200 |
| கரட் | 200 | 300 | 350 | 230 | 250 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 100 | 150 | 120 | 100 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 | 140 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 200 | 200 | 300 | 170 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 350 | 300 | 320 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 350 | 400 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 140 | 60-150 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 170-230 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 700 | 1000 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 100 | 400 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 150 | 90 | 300 |

# இராசிபலன்

23.09.2025
புரட்டாதி 07 , செவ்வாய்க்கிழமை
துதியை பின்னிரவு 4.06 மணிவரை

அத்தம் பிற்பகல் 2.08 மணிவரை
சுப நேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம்,பூரட்டாதி.

வளவன்

**மேஷம்** – தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** – வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.

**துலாம்** – தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், பணப் புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மகரம்** – வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**ரிஷபம்** – பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.

**கும்பம்** – குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பயணங்களின் போது அவதானம் தேவை.

**மிதுனம்** – யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி** – புதிய அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** – குடும்ப ஒற்றுமை கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செவிகுளிரும் செய்திகள வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** – நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்[illegible] நாளைய விருப்[illegible]மொன்று நி[illegible] வேறும் வாய்ப்பு[illegible] ஆன்மிக சிந்தனை மேலோ[illegible] நாள், போசன சுகமு[illegible]

மரணத்தை வென்றவன் மரணத்தைக் கண்டு பயப்பட மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 CPM இன் முகாமைத்துவ தலைமைத்துவத்துக்கான அதிசிறந்த விருது 4 விருதுகளை தனதாக்கிக் கொண்டார் கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு.எஸ்.சி.வீரசேகர

2025 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் நிறுவனத்தினால் (CPM) முகாமைத்துவ தலைமைத் துவத்துக்கான அதிசிறந்த விருதுகளில் 4 விருதுகளை, கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளர் மற்றும் தலைமை செயற்பாட்டு அதி காரியான திரு. எஸ். சி. வீரசேகர தனதாக்கிக் கொண்டார்.

திரு. எஸ். சி. வீரசேகர கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் எஸ்-லோன், பி ஈ ப்ளஸ் மற்றும் கெவில்டன் ஆகிய வணிக நிறுவனங்களை முகாமைத்துவம் செய்து வருகிறார்.

இந்த விருது வழங்கும் நிகழ்வு செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் நிர்வாகப் பணிப்பாளர் பிரிவுக்கான தங்க விருதினை கெப்பிட்டல் மகா ராஜா குழுமத்தின் குழும பணிப்பாளர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி எஸ். சி. வீரசேகர பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன், திரு. எஸ். சி. வீரசேகரவுக்கு பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுக்கான விருது, நிலைபேண்தகு தன்மை மற்றும் சுழற்சி பொருளாதாரத்துக்கான விருது மற்றும் அதிசிறந்த தலைமைத்துவ திறனுக்கான விருது என மேலும் மூன்று விருதுகள் வழங்கப்பட் டுள்ளன.

பெருநிறுவன சமூக பொறுப்பு ணர்வுக்கான விருது மர நடுகை திட்டத்தினமான "துரு கபகரு" (Thuru Kepakaru) உட்பட குழாய் பொருத்துநர் மற்றும் மின்சாரப் பணி யாளர் கழகங்கள் மற்றும் ஏனைய சமூக செயற்பாடுகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

இந்த முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்துக்கான விருதுகள் பின்வரும் மதிப்பீட்டு அளவுகோல் களுக்கு அமைய வழங்கப்பட்டுள்ளன.

1. தொலைநோக்கு தலைமைத்து வத்தை வெளிப்படுத்துதல்

2. புதுமை மற்றும் படைப்பாற் றலை உந்துதல்

3. சமூக சேவை நோக்குநிலை அல்லது நிறுவனப் பொறுப்பை வெளிப்படுத்தல்

4. வர்த்தக நாம கட்டமைப்பில் ஈடுபடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் அல்லது வணிகத்தில் அதிசிறந்த தரத்தை அடைதல்

5. பல்வகைப்படுத்தல் மற்றும் வளர்ச்சி உத்தியை செயல்படுத்துதல்

6. முன்மாதிரியான முகாமைத்துவ திறன்களை வெளிப்படுத்துதல்

7. ஊக்கமளிக்கும் மூலோபாய தலை மைத்துவம் மற்றும் மூலதனமாக்கல் போக்கு

கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளரும் தலைமை செயல்பாட்டு அதிகாரியுமான திரு. எஸ். சி. வீரசேகர விருது பெற்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

"என்னுடைய அனுபவத்தில் பொரு ளாதார நெருக்கடி, கொவிட் 19 மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்றவற்றால் விற்பனையில் பல கடினமான காலங்களை கடந்து சென்று கொண்டிருக்கிறோம். நாங்கள் இப்படி யான கடினமான காலங்களை கடந்து செல்வதற்கு காரணம் எங்கள் குழுவினர்.

எங்கள் குழுவினரை நான் குடும்பம் என்றே அழைக்கிறேன்.



எங்கள் வாழ் நாளில் பெரும் பாலான நேர த்தை அலுவலக த்தில் கழிக்கி றோம். நாங்கள் 24 மணிநேரத் தில் 8 மணி நேரம் தூங்குவத ற்கும், விழித்தி ருக்கும் 16 மணிநேரத்தை பொது விடயங்க ளுக்கு செலவிடுகி றோம். அதில் இரண்டு மணிநேரம் பயணிப்பதற்கும் மீதி 10 மணித்தி யாலங்களை அலுவலகத்திற்கும் செலவி டுகிறோம். நாங்கள் குடும்பத்துடன் குறைந்த நேரத்தையே செலவிடுகி றோம். ஆனால் அங்குதான் எம்மீது பற்று அதிகமாக உள்ளது.

விழித்திருக்கும் போது அலுவலக த்தில் அதிகளவு நேரம் செலவிடுகிறோம் ஆனால் அங்கு எங்கள் மீதான பற்று குறைவாக இருக்கும். எனக்கு பதவிக ளும், சலுகைகளும் என்னுடன் பணி செய்பவர்களால் தான் கிடைத்துள்ளது. அவர்கள் இல்லை என்றால் நான் இல்லை. அவர்கள் தான் சொத்து. காரணம் அவர்கள் வருமானத்தை உருவாக்குகிறார்கள், செழிப்பை, மகி ழ்ச்சியை உருவாக்குகிறார்கள்.

எங்கள் நிறுவனத்தின் வெற்றியின் இரகசியம் எங்கள் குடும்பம். எல்லோரும் சமமானவர்கள். அவர்களின் துயரங்கள் எங்கள் துயரமாக கருதி அவர்களை வழி நடத்துகிறோம்.

இந்த விருதுகள் அனைத்துக்கும் நான் ஒன்றும் செய்யவில்லை. இதை யெல்லாம் எனது குடும்ப உறுப்பி னர்களே செய்கிறார்கள். அதனால் நான் எனது விருதுகளை குடும்ப (குழுவினர்) உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டேன். ஒரு தலைவராக பணிவாக இருக்க வேண்டும். நீங்கள் பணிவாக இல்லை என்றால் ஒரு முத லாளியாக இருப்பீர்கள். ஒரு முதலாளி க்கும் ஒரு தலைவருக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

சுழற்சி பொருளாதாரம் என்பது தற் போது பிரபமைடைந்து வரும் ஒரு கரு த்து. ஆனால் இலங்கையில் எமது மூதாதையர்கள் சுழற்சி பொருளா தார காலத்தில் வாழ்ந்துள்ளார்கள். அதேபோல் நானும் இந்தக் கருத்துடன் வாழ்ந்து வருகிறேன். நான் பயன்படுத் தும் ஒவ்வொரு வளத்தையும் எனது எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப் பேன் என்பதை நான் உறுதிசெய்கி றேன். எங்களுடைய பணியை சரியாக செய்தால் நாங்கள் விருதுகளுக்கு தெரிவு செய்யப்படுவோம்.

சிறுவர்கள் மத்தியில் AI மற்றும் இணையத்தில் தீய விடயங்களை நுக ரும் பழக்கம் ஆபத்தானதாக காண ப்படுகிறது. இந்நிலையில், சிறுவர்களை அவற்றிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு "துரு கபகரு" (Thuru Kepa karu) மர நடுகை திட்டத்தை செயல்படு த்தியுள்ளோம். எமது மூதாதையர்கள் இயற்கை மீது அன்பு செலுத்தினர்கள். அவர்களால் சமூகத்துக்கு தீங்கு விளை க்கப்படவில்லை. அவர்களின் இதயம் மிகவும் மென்மையானதாக இருந்தது. 'துரு கபகரு' நிகழ்ச்சித் திட்டம் பாட சாலை ரீதியாக செயற்படுத்தப்படுகிறது.

என்னுடைய முதலாவது தலைவர்



எனது தாய். அவர் எனக்காக நிறைய தியாகங்கள் செய்துள்ளார். எனவே மற்றையவர்களுக்காக அவரது விருப் பங்களை யார் தியாகம் செய்ய முடியுமோ அவரே தலைவர் ஆவார்.

ஒருவர் பிறந்த ஆண்டுகளின்படி, முதலில் பேபி பூமர்ஸ், ஜென் X, ஜென் Y, ஜென் Z, மற்றும் ஜென் Beta என அழைக்கபடுகிறார்கள். "ஜென் Z' தலைமுறையினர் தொழில்நுட்ப யுகத்தில் வளர்ந்தவர்கள். எனவே, தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் கவனமாக இருக்க வேண்டும். தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனவே, எதிர்கால குழந்தை களுக்கு மிகவும் முக்கியமாக ஒருவ ருக்கொருவர் உணர்வுகள் இருப்பதை உணரச்செய்ய வேண்டும். உணர் வுகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். இந்த நாடு முற்றிலும் மரியாதையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. எந்த மதத்தவராக இருந்தாலும் அவர் கள் எப்போதும் கட்டமைப்புக்குட் பட்டவர்கள். அதனால் தான் நாம் கட்டுப்படுத்தப்படுகிறோம். எனவே பகுத்தறிவு நல்லது, அதனுடன் உண ர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் அவசியம்.

எங்களிடம் குழாய் பொருத்துநர் குழு ஒன்று உள்ளது. எனவே குழாய் திருத்தம் தொடர்பில் எங்களுக்கு அழைப்பு எடுத்து குழாயை திருத்தி தருமாறு அழைப்புவிடுத்தால், எங்கள் குழுவினர் உரிய இடத்திற்கு செல் வார்கள். அங்கு சென்று பார்வையிட் டதும் எங்களுடைய வர்த்தக நாமம் பொறித்த குழாய் அங்கு பொருத்தப்பட் டிருக்காவிடினும் அவர்களுக்கு சேவை களை வழங்கி உதவுவார்கள். அவர்களிடம் கட்டணம் அறவிடாமல் இலவசமாகவே செய்து கொடுப்பார்கள்.

இதனை போன்று அனைவரும் செய்தால் இந்த உலகம் மிகவும் அழ காக இருக்கும். ஆப்பிள் நிறுவனத்தால் கூட இதனை செய்வது கடினம். ஆனால் எங்களுடைய வர்த்தக நாமம் செய்து கொடுக்கும்" எனக் குறிப்பிட்டார்.

## சிவகுரு ஆதீனத்தில் ஆன்மிக உரை


(யாழ்ப்பாணம்)

நவராத்திரியை முன்னிட்டு சிவகுரு ஆதினத்தில் 10 நாட்களும் தினமும் மாலை 6 மணி முதல் 6.30 மணி வரை ஆன்மிகவுரை இடம்பெற வுள்ளது.

இன்றைய தினம் "மனதில் உறுதி வேண்டும்" எனும் தலைப்பிலும் நாளையதினம் "மனோபலத்தை அதிகரிப்பது எப்படி" எனும் தலைப்பிலும் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன்சுவாமிகள் ஆன்மிக உரையாற்றவுள் ளார். (8)

## யாழ்.மாவட்ட செயலகத்தில்

# இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு தொழிற்சந்தை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச்செய லகத்தில் இளைஞர் யுவதிக ளுக்காக வேலைவாய்ப்பு தொழிற்சந்தை நேற்று திங் கட்கிழமை இடம்பெற்றது.

சர்வதேச புலம்பெயர்வுக் கான அமைப்பின் அனுசர ணையில் யாழ்ப்பாண மாவட் டச் செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்கள மும் இணைந்து குறித்த தொழிற்சந்தையை நடத்தின.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்ஹ, பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலி ங்கம் பிரதீபன், தொழில் அமை ச்சின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

கணக்கியல் துறை, காப் புறுதித் துறை, சந்தைப்படுத் தல் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஹோட்டல் துறை, கணனித்துறை பயிற்சி நெறி, தாதியர் பயிற்சிநெறி, ஆடைத்தொழிற்சாலை, பாது காப்புச் சேவை, சுப்பர் மார்க் கெட் மற்றும் தனியார் உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய துறை களைச் சேர்ந்த நிறுவனங்கள் தொழிற்சந்தையில் கலந்து கொண்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற இளை ஞர்களுக்கு குறித்த தொழிற் சந்தை நல்லதொரு வாய்ப் பாக இருக்கும் என யாழ். மாவட்டச் செயலர் தெரிவித்துள் ளார்.

தொழிற்சந்தையில் பங்கேற் பதற்காக பெருமளவில் இளை ஞர் யுவதிகள் வருகை தந் திருந்தமை குறிப்பிடத்தக் கது. (8-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மணல் மண் விவகாரத்தில் அரசு தலையிட வேண்டும்

வட மாகாணத்தில் நிலவும் மண் தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாகக் கள்ள மண் விவகாரம் பூதாகரமாகியுள்ளது.

ஆம், வட மாகாணத்தின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால், அதிகூடிய விலையில் மண் விற்பனையாகின்றது.

இவ்வாறு அதிகூடிய விலையில் மண் விற்பனையாவதால், கள்ள மண் விவகாரம் எழுகை பெறுகிறது.

அதாவது கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்வதில் இருக்கக் கூடிய இட்டல் இடைஞ்சல்கள் மற்றும் மண்ணுக்கு கொடுக்க வேண்டிய உச்ச விலை காரணமாக, கள்ள மண் வியாபாரிகள் புதிது புதிதாக உருவெடுக்கின்றனர்.

உண்மையில் நியாயபூர்வமான விலையில் தாராளமாக மண்ணைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்குமாயின், கள்ள மண் என்ற பிரச்சினை தன்பாட்டில் நின்று போகும்.

ஆனால் அதைச் செய்வதற்கு எங்கள் வடக்கு மாகாண நிர்வாகத்தால் முடியாது என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பதன் அடிப்படை கட்டுமானமாகும்.

இங்கு கட்டுமானம் என்பதற்குள் வீட்டு நிர்மாணப் பணிகளும் அடங்கும்.

பொதுவில் ஏழை மக்கள் ஒரு சிறிய கல் வீட்டைக் கட்டி அதில் நிம்மதியாக இருக்கலாமென்றால், மண்ணின் விலை அதற்கு இடம் கொடுக்கவில்லை.

தவிர, மண்ணின் உச்சமான விலை காரணமாகத் தரமற்ற மண், கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிலைமையானது கட்டிடத்தின் உறுதித் தன்மையை கேள்விக்குரியதாக்குகிறது.

நிலைமை இதுவாக இருக்கின்ற போதிலும் வட மாகாணத்தில் நிலவுகின்ற மண் தட்டுப்பாட்டை எங்ஙனம் நிவர்த்தி செய்யலாம் என்பது தொடர்பில் எவரும் கருசனை கொள்வதாக இல்லை.

உண்மை. பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு நடைபெறுகின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் சண்டையும் சச்சரவும் விவாதமுமாக முடிந்து போகின்றன.

சுருங்கக்கூறின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் என்பன அங்கீகரிக்கப்பட்ட சண்டைக்கான இடங்கள் போல ஆகிவிடுகின்றன.

இந்நிலையில் கள்ள மண் மாபியாக்களின் அட்டகாசம் உச்சமடைவதுடன் கள்ள மண் மாபியாக்களால் அப்பாவி மனித உயிர்களும் காவு கொள்ளப்படுகின்றன.

எனவே இது விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு வட மாகாணத்தில் கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணுக்கு இருக்கக்கூடிய தட்டுப்பாட்டை நீக்கி நிலைமையை சுமுகமாக்க வேண்டும்.

# நாட்டு மக்களை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ராஜபக்ஷக்கள் அரச நிதியில் சொகுசு வாழ்க்கை

## மகிந்த குடும்பத்துக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

முறையற்ற சொத்து சேகரிப்பு மற்றும் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார நேற்றுத் திங்கட்கிழமை (22) இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் குறித்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்குக் கருத்துவெளியிட்ட அவர்,

அரசியல்வாதிகளின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தற்போது வெளியிட்டுள்ளது.

அதில் நாமல் ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ள சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரங்கள் சந்தேகத்துக்குரியதாகக் காணப்படுகிறது.

அவர் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களைக் காட்டிலும் அவரிடம் அதிகளவான சொத்துக்கள் அவரது உறவினர்கள் அல்லது நண்பர்களின் பெயர்களிலும் இருக்கக் கூடும்.

இரண்டாவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வசித்த கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்பதற்கு 51 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்பு பணிகள் முறையான விலைமனுக்கோரலுடன் மேற்கொள்ளப்பட்டதா? அல்லது புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளாமல் 51 கோடி ரூபாய் பதுக்கப்பட்டதா? என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் மனைவியான ஷிரந்தி ராஜபக்ஷ 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் இல.260 டொரிங்டன் மாவத்தை கொழும்பு 07 இல் 3கோடி 60 இலட்சம் ரூபாவுக்கு வீடொன்றைக் கொள்வனவு செய்துள்ளார். இந்த வீட்டைக் கொள்வனவு செய்வதற்காக அவருக்கு 360 இலட்சம் ரூபாய் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதில் சந்தேகம் உள்ளது. ஆகவே இவை குறித்து ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

ராஜபக்ஷர்கள் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி தங்களை வளப்படுத்தி நாட்டு மக்களை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளார்கள். இவர்களின் சொத்துக் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு, உரிய சட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்பம் முறையற்ற சொத்து சேகரித்த விவகாரத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதை போன்று ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## மனம்பேரிக்குச் சொந்தமான காணியில் ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் மீட்பு

மித்தெனியவில் சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமான காணியில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமானது என சந்தேகிக்கப்படும் 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி, இரண்டு ரி-56 மேகசின்கள், 115 சுற்றுகள், ரி-56 வெடிமருந்துகள் மற்றும் ஒரு கைக்குண்டு ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான சம்பத் மனம்பேரியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த ஆயுதங்கள் மித்தெனியவில் உள்ள ஒரு காணியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

ஐஸ் போதைப்பொருள் தயாரிக்க பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில் சம்பத் மனம்பேரி கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பத் மனம்பேரியை ஏழு நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்திற்கு செப்ரெம்பர் 17ஆம் திகதியன்று வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் அனுமதி அளித்த நிலையில் அவரிடம் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்றார். (ம-7)

## பருத்தித்துறை அஞ்சலகம் நடாத்தும் அஞ்சல் தின விளையாட்டு விழா

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் வடமராட்சிக்குட்பட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான சிறப்பு விளையாட்டு நிகழ்வானது இம்மாதம் 28ஆம் திகதி காலை 8 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை அஞ்சலதிபர் திருமதி யோகராணி வல்லிபுரநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பிரதி அஞ்சல்மா அதிபதி நாயகம் திருமதி நிவேதிகா கேதீசன் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் அதேவேளை,

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராத பெர்ணான்டோ, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் எம். பி.தயானந்தன், பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வி. டக்ளஸ் போல் மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## மண்டைதீவு மைதானத்திலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமையவுள்ள காணிக்குள் காணப்பட்ட துப்பாக்கி ரவைகள் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த சனிக்கிழமை ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் நிலத்தில் புதையுண்ட நிலையில் இனங்காணப்பட்டன.

அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் துப்பாக்கி ரவைகளை அகழ்ந்து எடுக்க அனுமதி கோரி ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் துப்பாக்கி ரவைகளை அகழ்ந்து எடுக்கும் பணிகளை நேற்றைய தினம் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதித்ததைத் தொடர்ந்து துப்பாக்கி ரவைகள் பாதுகாப்பாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

07

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சமூகமானது, ஆட்சிக்குப் பொறுப்புடைய அலுவலாளரைக் கொண்ட ஆட்சி செய்யும் வகுப்பு, விவசாய பாட்டாளிகளைக் கொண்ட தொழிலாளர் வகுப்பு, எனும் இரு வகுப்புக்களை மாத்திரம் கொண்டு விளங்கியது.

வர்த்தகம், அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக இருந்தமையினால் அன்றிருந்த வர்த்தகர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். ஆங்கிலேயர் தமது சீர்திருத்தங்களினதும், பொருளாதார முயற்சிகளினதும் பேறாக, இவ்விரு வகுப்புகளுக்கிடையில் தற்கால நடு வகுப்பினர் என்ற வகுப்பினைத் தோற்றுவிக்க வழி செய்தனர்.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தி, இலங்கையின் வர்த்தகருக்கும், தோட்டச் சொந்தக்காரருக்கும் அளப்பரிய வாய்ப்புக்களைப் பெற்றுத்தந்தது. தோட்டங்கள் திறக்கப்பட்டதினால் பல புதிய முயற்சிகளும் வேலைகளும் தோன்றின.

காடுகளைத் துப்பரவு செய்தல், தொழிற்சாலைகள், வீடுகள் நிறுவுதல் போன்ற வேலைகளுக்கு ஒப்பந்தக்காரரும், தொழில் விற்பன்னர்களும் தேவைப்பட்டனர். தோட்டங்களின் விளை பொருள்களை ஏற்றுமதி செய்யப் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் தோன்றினர். தோட்டத் தொழிலாளரின் உணவு, புடவைத் தேவைகளை ஈடுசெய்ய வர்த்தகர் எழுந்தனர்.

மலைநாட்டிலும் கொழும்பிலும் கடைகள் தோன்றியவுடன் பல வியாபார முதலாளிகளும் தோன்றினர். தபால் தந்திச் சேவைகளும் புகையிரத வீதிகளும் பிரதான நகரங்களை இலகுவாகத் தொடர்புபடுத்தின. இதனால் வர்த்தகர்களின் செல்வநிலை ஓங்கிற்று. வர்த்தகத்தில் பணம் சம்பாதித்த முதலாளிகள், தாமே தோட்டங்களை வாங்க அல்லது திறக்க முற்பட்டனர்.

நாளடைவில் ஒரு சில தேயிலைத் தோட்டங்களும், இறப்பர்த் தோட்டங்களின் அரைப் பகுதியும், தென்னந் தோட்டங்கள் முழுவதும் இலங்கையருக்குச் சொந்தமான, அம்முதலாளிகளின் பிள்ளைகள், பிற நாடுகளுக்குச் சென்று ஆங்கிலத்திலும், ஆங்கிலப் பழக்கவழக்கங்களிலும் தேர்ச்சி பெற்றுத் தாயகம் திரும்பினர்.

ஆங்கிலேயர் நிறுவிய நிருவாக பரிபாலன முறை, பெருந்தொகையான அரசாங்க சேவையாளரை வேண்டி நின்றது. இத்தேவையை ஈடு செய்யும் முகமாக நாட்டின் எல்லாப் பாகங்களிலும் 1834 தொடக்கம் ஆங்கிலப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. இப்பாடசாலைகளில் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்ற எல்லா இனத்தவர்களும் சாதியினர்களும் அரசாங்க சேவைகளில் சேர்ந்தனர்.

1833 இல் பிரித்தானிய அரசாங்கம், இலங்கை எங்கும் ஒரே விதமான நீதிமன்றங்களை அமைத்து, எவ்வித பாகுபாடுமின்றி எல்லா மக்களும் சட்டத்தின் முன் சமன் என்ற நிலையை ஏற்படுத்தியது. இச்சட்டத்துறை நாட்டின் விவேகிகளை பெரும் எண்ணிக்கையில் கவர்ந்தது. விரைவில் அறிவும் நாவன்மையும் படைத்த நியாய துரந்தர்கள் இலங்கைச் சமூகத்தின் முன்னணியில் திகழ்ந்தனர். 1835 தொடக்கம் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரிக்கவே, நிருவாக அமைப்பிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பல புதிய இலாக்காக்கள் நிறுவப்படவும், புது உத்தியோகங்கள் எழவும் வழியுண்டாயிற்று.

உயர் பதவிகள் ஆங்கிலேயரினால் நிரப்பப்பட்டன. ஏனைய உத்தியோகத்தர்கள் ஆங்கிலக் கல்வி அறிவுடைய சுதேசிகளினின்று தெரிந்தெடுக்கப்பட்டனர். நாளடைவில் இலங்கையில் ஒரு "வெள்ளைச் சட்டை வகுப்பினர்" உருவாகி அரசாங்கத்தினதும், தனியார் துறையினதும் இலிகிதர் வேலைகளைச் செய்யத் தொடங்கினர். இவர்களது உத்தியோக வாய்ப்புக்களுக்கு ஆங்கில மொழித் தேர்ச்சிதான் பிரதான திறவுகோலாக அமைந்தது.

ஆங்கிலமொழி, அரசாங்க உத்தியோகங்களுக்குப் பிரதான வாயிலாக அமைந்தமையினால் ஆங்கிலப் பாடசாலைகளுக்குப் பெரும் தேவை ஏற்பட்டது. 1869 வரை இலங்கையில் கிறிஸ்தவ மிஷன்கள் தம் செலவில் பாடசாலைகளை நிறுவி கல்வியைப் புகட்டி வந்தன. அவ்வாண்டு பிரித்தானிய அரசாங்கம் சுய மொழிக் கல்விக்குப் பொறுப்பேற்றதுடன், மிஷன் பாடசாலைகளுக்குப் பணவுதவி கொடுக்கவும் உடன்பட்டது.

இதனால் ஆங்கிலப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், ஆசிரியர்களின் தொகை பெருகவும் தொடங்கிற்று. இப்பாடசாலைகளில் பயின்றவர்கள், நாளடைவில் நியாய துரந்தரர்களாகவும், வைத்தியர்களாகவும், பட்டதாரிகளாகவும் கூடுதலான எண்ணிக்கையில் வெளிப்பட்டனர்.

தத்தம் துறைகளில் மேற்குலகின் உத்தியோகத்தர்களுடன் சமபதமுடையவர்களாக இவர்கள் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தனர். ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற இலங்கையருக்கென பல தொழிற் கல்லூரிகள் நிறுவப்பட்டன.

1864 இல் வைத்தியக் கல்லூரி, 1873 இல் சட்டக் கல்லூரி, 1893 இல் தொழில் நுட்பக் கல்லூரி, 1903 இல் ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலை எனும் உயர் நிலைப் பாடசாலைகளை அரசாங்கம் நிறுவி, அவற்றை நடாத்தத் தொடங்கியது. இக்காரணங்களினால் 1870 தொடக்கம் மத்திய வகுப்பினரின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வரலாயிற்று.

இப் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளினால் 19 ஆம் நூற்றண்டின் பிற்பகுதியில், நியாய துரந்தர்கள், அரசாங்க சேவையாளர், குடியியல் நீதி பரிபாலன அதிகாரிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் என்பவர்களையும், புதுப் பொருளாதார வாய்ப்புக்களை பயன்படுத்தி முன்னிலைக்கு வந்த தோட்ட முதலாளிகள், வர்த்தகர், தரகர், ஒப்பந்தக்காரர் எனும் பல்வேறுபட்ட பிரிவுகளைக் கொண்ட நடுவகுப்பொன்று இலங்கைச் சமுதாயத்தில் தோன்றியது. அவர்கள், சாதி வித்தியாசங்களைப் பாராட்டும் வழக்கத்தை ஓரளவு விட்டு விட்டுப் பணம், கல்வி எனும் விடயங்களில் வித்தியாசம் பாராட்டினர். பணத்தினாலும், கல்வியினாலும் உயர்வு பெற்றவர்கள் தனி வகுப்பினராக அமைந்தனர்.

இவ்வகுப்பினர் ஐரோப்பியரினது நடை உடை பாவனைகள், பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், பண்பாடு முதலானவற்றை பின்பற்றலானர்கள். ஆங்கில மொழி, அவர்களுடைய மிகவும் போற்றப்பட்ட உடமையாயிற்று. ஆங்கிலப் பல்கலைக் கழகங்களில் பயின்ற இலங்கையர், ஆங்கில மொழியை ஆங்கிலேயரிலும் பார்க்கத் திறமையுடன் பேசக் கற்றுக் கொண்டனர்.

அம்மொழியின் வழியாக அவர்கள் மேற்குலகின் அரசியல், சமூக, பொருளாதாரக் கருத்துக்களை அறிந்தனர். இங்கிலாந்தில் மத்திய வகுப்பினர், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் கையாண்ட வழிவகைகளை நன்கறிந்த அவர்களுக்கு, சுய ஆட்சியும், பொருளாதாரச் சுதந்திரமும் அரசியல் நோக்கங்களாய் அமைந்தன.

அரசாங்க உத்தியோகங்களில் உயர் பதவிகளைத் தமதாக்க வேண்டுமென்பது அவர்களின் உடன் இலக்காயிற்று. மேற்குலகின் விஞ்ஞானத்தினதும், புதுக்கல்வி முறையினதும் அடிப்படையில் இலங்கையை முன்னேறச் செய்ய வேண்டுமென்பதும், அவர்களது பொது இலட்சியமாகும்.

#### குடியியற் சேவையில் சீர்திருத்தம்

குடியியற் சேவையாளரின் திறமையைப் பொறுத்தே இலங்கையில் நல்லாட்சி நிலவியதனால் குடியியற் சேவையின் திறமையை அதிகரிப்பதற்கும், திறமை மிகுந்தவர்களை அச்சேவையிற் சேர்ப்பதற்கும் 1850 தொடக்கம் பல நடவடிக்கைகள் கையாளப்பட்டன. 1845 தொடக்கம் 1856 வரை இங்கிலாந்தில் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரமே குடியியற் சேவையினுள் புகுந்தனர்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தவிசாளருக்கு...

கள் சக்தியின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தின் அபிவிருத்தியை மக்களுக்கு கிடைக்கவிடாது கரைச்சி பிரதேச சபை செயற்படுவதாகத் தெரிவித்து குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"சுயலாப அரசியல் நோக்கில் கிளிநொச்சியின் அபிவிருத்தியைத் தடுக்காதே, அதிகாரத்தால் மக்களை ஆள நினைக்காதே, இதுவரை காலமும் ஏமாற்றியது போதும், அப்பாவி மக்களுக்கு அநியாயம் செய்யாதே" போன்ற சுலோகங்களையும் ஏந்திய வாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து பேரணியாக பிரதேச சபை வரை சென்று பிரதேச சபைக்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட நேரம் தவிசாளர் அலுவலகத்தில் இல்லாத நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் பிரதேச சபையின் செயலாளரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். (ம-7)

## 6 ஆயிரம்...

எஸ்.போதரகமவிடம் தெரிவித்தது.

முந்தைய விசாரணையின்போது இராணுவத்தினரால் மீட்கப்பட்ட 10 ஆயிரம் தங்கப் பொருட்களை பரிசோதித்து அதில் உள்ள தங்கத்தின் அளவு மற்றும் எடை குறித்த விரிவான அறிக்கையை நீதிமன்றத்துக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நகல்களுடன் சமர்ப்பிக்குமாறு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையால் பரிசோதிக்கப்பட்ட 6 ஆயிரம் தங்கப் பொருட்கள் மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இது தொடர்புடைய குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நேற்று அழைக்கப்பட்டபோது சமர்ப்பணங்களை முன்வைத்து குறித்த அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர். (ம-7)

## எதிர்காலத்தில்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் சிறைக்குச் செல்ல வேண்டி ஏற்படும் என பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலட்சக்கணக்கான சொத்துக்களை வைத்துள்ள மக்கள் விடுதலை முன்னணியினர் சொத்து விபரங்களைச் சமர்ப்பிக்காது உள்ளமை சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டிய குற்றமாகும்.

இந்த நாட்டின் ஜனாதிபதி வரலாற்றில் முதற்தடவையாக 2025 மே மாதம் 25 ஆம் திகதி தனியார் ஜெட் விமானத்தில் பயணம் மேற்கொண்டார். எனவே அடுத்துவரும் சொத்து விபர அறிக்கையில் இந்த விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மாத்திரம் இந்தத் தவறை இழைக்கவில்லை.

அமைச்சர் நளின் ஹேவகேவின் வங்கிக்கணக்கில் 23 இலட்சம் ரூபா பணம் இருந்தது. அவரது மகளின் பிறந்தநாளுக்கு பரிசாகக் கிடைத்த பணம் என்று கூறியிருந்தார். அவ்வாறாயின் 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பணத்தினை பரிசாக வழங்கியவர்கள் இருந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிட வேண்டும். சொத்துக்கள் அபகரிப்பு, சொத்துவிபரங்களை மறைத்தல் ஆகியன பாரிய குற்றமாகும். எனவே எதிர்காலத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் சிறைக்குச் செல்ல வேண்டி ஏற்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## தெற்கு...

காப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களிடமிருந்தும் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய அந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அரசியல் கலாசாரம் காரணமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் வலையமைப்புகள் பெருகியதாகவும் தற்போதைய அரசாங்கம் அதனை முற்றாக ஒழிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், நேற்று மாத்திரம் 3 பெரிய போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் கூறினார். (ம-7)

## வடக்...

ளரை மாற்ற வேண்டும் எனக் கோரி நேற்றுத் திங்கட்கிழமை யாழ். முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்னால் சிவசேனை அமைப்பினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கிளிநொச்சி சென்.தெரேசா பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட அதிபர் உரிய தகுதி நிலைகளுடன் காணப்படாத நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள்முன் வைக்கப்பட்டது.

அதேசமயம் கிளிநொச்சியில் சில பாடசாலைகளுக்கு இன்னும் நிரந்தர அதிபர் நியமிக்கப்படாத நிலையில் திரேசாவுக்கு மட்டும் அதிபர் ஓய்வு பெற்று இரு நாட்களில் உரிய தரத்தைப் பூர்த்தி செய்யாத அதிபரை நியமித்தமை தொடர்பில் தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

இதேவேளை இனந்தெரியாத நபர்கள் சிவ சேனை அமைப்

## 1,900 பேர் ஆட்சேர்ப்பு

சுகாதார சேவையில் கடந்த காலங்களில் நிலவிய தவறான நியமன முறையை சீர்செய்வதற்காக எதிர்வரும் இரு மாதங்களில் சுகாதார சேவைக்காக சுமார் 1,900 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளதுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் சுகாதார ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் விசேட திட்டம் ஒன்றும் சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட உள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (ம-7)

பின் போராட்டப் பந்தலுக்குச் சென்று குழப்பம் விளைவித்தனர்.

இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதால் அருகில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் குழப்பம் விளைவித்த நபர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (ம-7,104)


மஹஜன சம்பத
திகதி 2025.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 5960
W 3 0 3 6 1 0
அத சம்பத
W 3 6 1 0
சீட்டிழுப்பு இலக்கம் 0535

சுப தவசக்
திகதி 2025.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 0076
சிம்மம் 02 06 13 19

தன நிதானய
திகதி - 2025.09.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1990
J 45 52 63 75 J

மெகா பவர்
திகதி 22/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2308
P 18 41 42 61 76

ஜய
திகதி 2025.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 0228
I 6 7 6 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4202
சீட்டிழுப்பு திகதி 22.09.2025
L 40 47 73 78
L

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 1269
மிதுனம் 23 25 32 49 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.09.2025 வெற்றி வாரம் 0668
L 0 5 4 2 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,804,042.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2934
சீட்டிழுப்பு திகதி 2025.09.22 தினம் திங்கட்கிழமை
18 25 43 59 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,674,544.00

சனிதா
திகதி 22.09.2025 வெற்றி வாரம் 5095
15 28 42 66 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,894,975.60

ஜயோதா Jayoda
திகதி 2025.09.22 வெற்றி வாரம் 2163
38 40 61 68 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,787,787.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4646
சீட்டிழுப்பு திகதி 22.09.2025 தினம் திங்கட்கிழமை
02 19 29 57 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,563,659.20

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 17 08 29 32 59
சீட்டிழுப்பு வாரம் 2110
22.09.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.595,542,957.80

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2760
சீட்டிழுப்பு திகதி: 2025.09.22
31 52 56 68 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,446,298.40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3941)

076 825 7716 (ஆகாஸ்)

**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது) சம்பளம் 30,000/- முதல் 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3938)

V2 TRAVELS 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com

**கனடா - வரி இல்லாமல்**

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை நிறைந்த சேவை

கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்

14 நாட்களில் Delivery (C-3938)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வலம்புரி விளம்பரம் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

**TECHNO WORLD**

A/L தொழில்நுட்பப் பிரிவு

10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது

A/L 2025 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

**விசேட செயலமர்வு**

27,28,29 September 2025 → தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

30 Sep. 01,02 Oct. 2025 → பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்

03,04,05 October 2025 → ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்

"காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை"

வெலிங்டன் சந்தி, (லிங்கன் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (C-3936)

தொடர்புகளுக்கு: 077 017 5346


## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, Doctor பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

02. பருத்தித்துறை - அல்வாய், 1996, இந்து, அவிட்டம், Bsc, Msc, Norway பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

03. இருபாலை, 1993, இந்து, திருவோணம், Masters, Germany citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

04. புங்குடுதீவு, 1997, இந்து, அவிட்டம், Bsc, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

05. தம்பசிட்டி, 1998, இந்து, மகம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

06. திருநெல்வேலி - புங்குடுதீவு, இந்து, 1996, ரோகிணி, Civil Engineer, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

07. அளவெட்டி, 1997, இந்து, மூலம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

8. மானிப்பாய், 1993, இந்து, ஆயிலியம், MBBS, Doctor, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

9. சாவகச்சேரி, 1990, இந்து, உத்திரட்டாதி, Graduate, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

10. காரைநகர், 1992, இந்து, மிருகசீரிடம், Masters, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (5488)

S.Sharma J.P www.thaalee.com | 077 539 3728

## டிமோ பட்டா விற்பனைக்கு

அலுமினிய பிட்டிங்குடன் இரண்டு பக்க கதவோடு டிமோ பட்டா விற்பனைக்கு உண்டு. (5487)

076 105 6343

## காணி விற்பனைக்கு

கரவெட்டி மத்தொனி என்னும் இடத்தில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (C-3937)

077 808 4909


## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (1568)

076 889 1308
077 839 3974

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 - 10 - 1944



இறப்பு 22 - 09 - 2025

## கந்தசாமி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கமநல சேவை நிலையக் கணக்காளர் கிளிநொச்சி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இல.28, D8, உருத்திரபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலசுப்பிரமணியம் நேற்று (22.09.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பொற்கொடி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைராசா - ஞானசக்தி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும் பிரபாகரன் (வவுனியா), சுபேந்தினி (வட்டுக்கோட்டை), பிரபாலினி (கிளிநொச்சி), வதனி (கிளிநொச்சி), அஜந்தினி (வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற சுஜகோபன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஸ்ரீகௌரி (வவுனியா), காலஞ்சென்ற தேவராஜன் (வட்டுக்கோட்டை), இந்திரன் (கிளிநொச்சி), றெஜி (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கண்ணகாம்பிகை, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மகாலிங்கம் மற்றும் செல்வராணி, நவரத்தினம், நாகேஸ்வரி, யோகேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், கண்ணலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கார்த்திகா, சதீசன் (S.J. Photography), டிலக்சன், டிலானி, சஜீவன், பிரியங்கா, கௌதமன், பிரணவன், ஜெனிஷன், ஜென்சிகா, சுஜிதன், சானுஜா, சாதனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை. (C-3939)

தகவல்: குடும்பத்தினர்

# சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 27 . 10 . 1956



மறைவு 25 . 08 . 2025

கடந்த 25.08.2025 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் கிருஸ்ணமூர்த்தி செல்வராணி

மூத்தவளாய் வந்து முன்னே வழிகாட்டி
ஆளாக்கி அரவணைத்து,
காத்திருந்த மனம் கனத்து
தாளாது தவித்திருக்க
கூத்தனவன் பாதம் குடிகொண்டு
மீளாத் துயர் தந்த
ஆத்தாளே! ஆற்றா தழுகின்றோம்
விழி துடைக்க வாருமம்மா!

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 24.09.2025ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (1577)

நாவற்காடு, அச்சுவேலி.

077 613 8910

இங்ஙனம், குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org